முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

# 85 - மனைப் பொருளியல்

# புள்ளியிடும் திட்டம்



**இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.**

**இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.**

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2023)
## 85 – மனைப் பொருளியல்
## புள்ளி வழங்கும் திட்டம்

பகுதி I

புள்ளி 01 x 40　　　　40 புள்ளிகள்

பகுதி 1 ஆம் வினா 10 பகுதிகளைக் கொண்ட கட்டாய வினாவாகும்.

I 01 – 10 வினாவிற்கு 02 புள்ளி　　02 x 10　　20 புள்ளிகள்

02 – 07 வரையுள்ள 6 வினாக்களில் 4 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

ஒரு வினாவுக்கு 10 புள்ளிகள்　　10 x 04　　40 புள்ளிகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02. | (i) | | 03 | 03. | (i) | 03 | 04. | (i) | 03 |
| | (ii) | | 03 | | (ii) | 03 | | (ii) | 03 |
| | (iii) | a. | 02 | | (iii) | 04 | | (iii) | 04 |
| | | b. | 02 | | | | | | |
| | | | புள்ளிகள் 10 | | | புள்ளிகள் 10 | | | புள்ளிகள் 10 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05. | (i) | 03 | 06. | (i) | 03 | 07. | (i) | 03 |
| | (ii) | 03 | | (ii) | 03 | | (ii) | 03 |
| | (iii) | 02 | | (iii) | 04 | | (iii) | 02 |
| | | 02 | | | | | | 02 |
| | | புள்ளிகள் 10 | | | புள்ளிகள் 10 | | | புள்ளிகள் 10 |

இறுதிப் புள்ளிகளைக் கணக்கிடல்


| | |
|---|---|
| பகுதி I | 40 புள்ளிகள் |
| பகுதி II | 60 புள்ளிகள் |
| மொத்தப்புள்ளிகள் | 100 |

**க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2022(2023)**
**விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்**

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன் பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும் போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும் போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாகப் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கறுப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




03 $(i)\ \frac{4}{5} + (ii)\ \frac{3}{5} + (iii)\ \frac{3}{5} = \boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள்

1. துளைத்தாள் தயாரித்தல்

   I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

   II. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

   III. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக் கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

   IV. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

   **V. வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. **அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்து விட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.**

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை √ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளினால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும், **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் √ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும் போது ஓவலண்ட் கடதாசியின் இடது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன்பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டிவிடவும்.
4. மொத்தப் புள்ளிகளை கவனமாக கூட்டி முன்பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும். அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தபுள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்?

★ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்பட மாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்படவேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுத** வேண்டும்.

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப்பட்டியலை தயார் செய்யும் போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I,II மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியிலில் பதிந்து **எழுத்திலும் எழுத வேண்டும்.**

VI. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப் பட்டியிலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

முக்கிய குறிப்பு:

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப் புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளிப் பட்டியிலில் பதியப்படுதல் வேண்டும். எந்த விதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப் புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்த உதவிப்பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப்பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

## 85 - மனைப்பொருளியல்

### பகுதி I தேர்ச்சியும் தேர்ச்சி மட்டமும்

I ம் வினாப்பத்திரம் 40 வினாக்களை உள்ளடக்கியது. வினா இலக்கம் 1 - 18 வரை உணவும் போசணையும் பாடத்திட்ட பரப்பிற்கு உள்ளடங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டம் 3 - 9 வரை இந்த பாடப் பரப்பிலிருந்து வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. போஷணை அடங்கிய உணவுகளை பகுப்பாய்வு செய்தல், போஷணைக் குறைபாடுகளினாலான நோய்கள், போஷணைக் குறைபாட்டில் தாக்கம் செலுத்தும் உணவுகள், சமிபாட்டுத் தொகுதி, வாழ்க்கைச் சக்கரத்திற்கு ஏற்ற போஷணைகள், உணவு நற்காப்பு முறைகளில் பின்பற்றப்படும் நுட்பங்கள், இலங்கையில் காணப்படும் போஷணைப் பிரச்சினைகள் பற்றிய அறிவு தெளிவு பெற்றுக் கொள்ளல் இவற்றில் கல்வி கற்றுக்கொள்ளல், திறன்களைப் பெற்றுக்கொள்ளல்.

வினா 19 – 29 குழந்தை விருத்தி தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமான தேர்ச்சி இலக்கம் 12, 13 யை உள்ளடக்கியது. இவ்வினாக்களில் பெண் இனப்பெருக்கத் தொகுதியின் அமைப்பு, கட்டிளமைப் பருவத்தினரின் வளர்ச்சி, கர்ப்பிணி பருவத்தினருக்கு குழந்தை உணவு பழக்கப்படுத்தல், தடுப்பூசிகள் பற்றி அறிந்துக் கொள்ளல்.

வினா 30 –34 வரையான வினாக்கள் தேர்ச்சிகள் 10, 11 இல் உள்ளடங்கிய தேர்ச்சி மட்டத்தின் புடைவையும் உடை அமைத்தலும் அமைந்துள்ளது. தையல் முறைகள், ஆடை நிர்மாணிப்பின் முக்கியத்துவம், ஆடைகள் தைத்தல், பயன்படுத்தும் அளவுகள், ஆடை நிர்மாணிப்பு படிமுறைகள் பற்றிய அறிவும் அனுபவமும் பெற்றுக்கொள்ளல், திறமையும் பெற்றுக் கொள்ளல்.

35 – 40 வரையிலான வினாக்கள் தேர்ச்சி மட்டம் 1 – 2 வரையிலான மனை நிர்வாக பகுதியிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளன. மனை வளங்கள் பற்றிய அனுபவம், வீட்டினைத் திட்டமிடல், மனை அலங்காரம் போன்றவற்றில் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**85 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## மனைப் பொருளியல் I

அறிவுறுத்தல்கள்:

※ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

※ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (×) இடுக.

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. புரதங்களின் தொழிற்பாடாக அமைவது,
(1) சக்தியை வழங்குதலாகும்.
(2) உடல் வெப்பநிலையைச் சீராக்குதலாகும்.
(3) அக உறுப்புகளுக்குப் பாதுகாப்பை வழங்குதலாகும்.
(4) உடலில் அனுசேபத் தாக்கங்களைத் துரிதப்படுத்துதலாகும்.

2. பின்வருவனவற்றில் நிரம்பாக் கொழுப்பமிலம் எது?
(1) பாமிற்றிக்கமிலம் (2) ஸ்ரியரிக்கமிலம் (3) லினோலெயிக்கமிலம் (4) ப்யூற்றிக்கமிலம்

3. நன்மைதரும் கொழுப்பைக் கொண்ட உணவுப் பதார்த்தம்
(1) விளாம்பழம் (2) ஆனைக்கொய்யா (3) தேங்காய் (4) தோடம்பழம்

4. பின்வருவனவற்றில் எந்தக் கனிப்பொருளின் குறைபாடு, கர்ப்பிணிப் பருவத்தில் பிள்ளை இறந்து பிறத்தல், முதிர்வுக்கு முன்னரே பிறத்தல் ஆகியவற்றுக்குக் காரணமாக அமைகிறது?
(1) அயடீன் (2) கல்சியம் (3) சோடியம் (4) மக்னீசியம்

5. விற்றமின் $B_1$ இன் இரசாயனப் பெயர்,
(1) தயமின் (2) றைபோபிளேவின் (3) நியசின் (4) பிரிடொக்சின்

6. பின்வரும் விடயங்களைக் கருதுக.
- கொழுப்பில் கரையும்.
- பால், நெய் ஆகியவற்றில் அடங்கியிருக்கும்.
- என்புகளின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாகும்.

இந்த விடயங்களுடன் தொடர்பான விற்றமின் எது?
(1) விற்றமின் A (2) விற்றமின் C (3) விற்றமின் D (4) விற்றமின் K

7. புரத நிரப்பீட்டுக்கான தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளைச் சேர்க்கும்போது தொடர்புறும் இரண்டு அமினோஅமிலங்களாவன,
(1) வலீனும் லைசீனும் (2) மெதியோனினும் லியூசினும்
(3) வலீனும் லியூசினும் (4) லைசீனும் மெதியோனினும்

8. காபோவைதரேற்று, கல்சியம், விற்றமின் $B_2$ ஆகியவற்றைக் கொண்ட உணவுப் பதார்த்தம் எது?
(1) இறைச்சி (2) மீன் (3) பால் (4) முட்டை

9. உணவுப் பதார்த்தமொன்றின் போசணைப் பெறுமானம் பற்றிய கூற்றுகள் சில வருமாறு.
   - அதிக நார்ப் பதார்த்தங்களைக் கொண்டது.
   - இரும்புச்சத்தைக் கொண்டது.
   - விற்றமின் C யைக் கொண்டது.

   இந்த உணவுப்பொருளாக அமைவது,
   (1) கரட் (2) வத்தாளை (3) கொய்யா (4) வல்லாரை

10. முன்சிறுகுடலில் நடைபெறும் சமிபாட்டுச் செயன்முறை யாது?
    (1) பல்சக்கரைட்டு —அமைலேசு→ இருசக்கரைட்டு
    (2) புரதம் —பெப்சின்→ பெப்தோன்
    (3) இருபெப்தைட்டு —பெப்திடேசு→ அமினோவமிலம்
    (4) இருசக்கரைட்டு —சுக்குரேசு, லக்ரேசு, மோல்ரேசு→ ஒருசக்கரைட்டு

11. கொழுப்பின் சமிபாடு தொடர்பான பிழையான கூற்றைத் தெரிக.
    (1) கொழுப்பின் சமிபாட்டுக்கு இலிப்பேசு நொதியம் அவசியமாகும்.
    (2) பித்தச்சாறு கொழுப்பின் குழம்பாக்கலுக்கு உதவும்.
    (3) பித்தப்பையினுள் பித்தச்சாறு சுரக்கப்படும்.
    (4) சிறுகுடலில் கொழுப்புச் சமிபாடு முற்றுப்பெறும்.

12. நாளாந்த போசணைத் தேவைக் குறிப்பு பற்றிய சரியான கூற்றைத் தெரிக.
    (1) கல்சியத் தேவை கிராமில் குறிப்பிடப்பட்டுள்ளது.
    (2) கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் நிலைமைகளின்போது சக்தித் தேவை சமமாகும்.
    (3) வயோதிபப் பருவத்தில் புரதத் தேவை குறைவாகும்.
    (4) கட்டிளமைப் பருவத்தில் ஆண், பெண் பிள்ளைகளின் விற்றமின் A யின் தேவை சமனாகும்.

13. பின்வருவனவற்றில் எந்தச் சமையல் முறையின்போது மிகக் குறைவான வெப்பநிலை பயன்படுத்தப்படுகிறது?
    (1) நீராவியில் அவித்தல் (2) மெல்லவியல் (3) அவித்தல் (4) தட்டில் வாட்டுதல்

14. மேலைத்தேய முறையில் உணவுகளைப் பரிமாறுவதற்கு மேசையைத் தயார்செய்யும்போது, கோப்பையின் இடப்பக்கத்தில் வைக்கப்படுவது / வைக்கப்படுவன,
    (1) முள்ளுக்கரண்டி மட்டுமாகும். (2) கரண்டியும் கத்தியும் மட்டுமாகும்.
    (3) கத்தி மட்டுமாகும் (4) கரண்டியும் முள்ளுக்கரண்டியும் மட்டுமாகும்.

15. குறைபோசணைக் குறைபாடுகள் ஆவன,
    (1) கல்சியக் குறைபாடு, விற்றமின் A குறைபாடு (2) [illegible] குறைபாடு , [illegible] குறைபாடு
    (3) [illegible] குறைபாடு , விற்றமின் K குறைபாடு (4) [illegible] குறைபாடு , [illegible] குறைபாடு

16. குழந்தைகளில் நோயொன்றின் அறிகுறிகள் சில வருமாறு.
    - இலகுவில் நோய்த்தொற்றுக்கு ஆளாதல்
    - சோர்வாக இருத்தல்
    - வயிறு, கை, கால்கள் வீங்குதல்

    இந்தக் குறைபாட்டு நோயாக அமையத்தக்கது,
    (1) பெலகரா (2) கண்டக்கழலை (3) மராஸ்மஸ் (4) குவாசியோர்க்கோர்

17. உயிரியல் காரணிகளினால் ஏற்படும் உணவு பழுதடைதலுக்கான உதாரணமாக அமைவது,
    (1) பொருத்தமற்ற களஞ்சியப்படுத்தலினால் வெண்ணெய் பாண்டலடைதல்
    (2) சில நாட்கள் திறந்து வைக்கப்பட்டமையால் பாண் சிலவிடங்களில் மேற்பரப்பு கருமை நிறமாதல்
    (3) அப்பிள் பழத்தின் வெட்டுமேற்பரப்பு கபிலநிறமாதல்
    (4) முதிர்ந்த மாங்காய் பழுப்பதனால் மஞ்சள் நிறமாதல்

18. நற்காப்புச் செய்யப்பட்ட உணவான தக்காளிச் சட்னி பற்றிய சரியான கூற்றைத் தெரிக.
    (1) சீனி, உப்பு ஆகிய நற்காப்புப் பதார்த்தங்களே பயன்படுத்தப்படும்.
    (2) சீனி சேர்ப்பதன் மூலம் நுண்ணங்கிகளின் வளர்ச்சி தடைப்படும்.
    (3) உப்பு சேர்ப்பதன் மூலம் உணவின் pH பெறுமானம் குறைவடையும்.
    (4) தயாரிக்கப்பட்ட உடனேயே அது பொதிசெய்யப்படும்.

**19.** கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் பொதுவான துணைப் பாலியல்பு;
(1) குரல் இனிமையாதல்  (2) தசைவிருத்தி ஏற்படல்
(3) உயரம், நிறை ஆகியன அதிகரித்தல்  (4) தோட்பட்டை அகலமாதல்

**20.** கட்டிளமைப் பருவ விருத்தி தொடர்பான பிழையான கூற்றைத் தெரிக.
(1) பெற்றோரைச் சிந்தித்துப் பார்த்து தீர்மானங்களை மேற்கொள்ள முற்படுவர்.
(2) பிறரிடத்தில் தன்னை வெளிக்காட்ட முற்படுவர்.
(3) உடலுடன் ஒப்பிடுகையில் விட கை, கால்களின் வளர்ச்சி விரைவாக நடைபெறும்.
(4) பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் ஒரே வயதில் பூப்பெய்துவர்.

**21.** கட்டிளமைப் பருவத்தின் ஒட்டுமொத்த விருத்தியைக் கருதும்போது நிலையில்லாத் தன்மை, தயக்க சுபாவம் ஆகியவற்றை அவதானிக்க முடிவது;
(1) உடல் விருத்தியின் போதாகும்.  (2) சமூக விருத்தியின் போதாகும்.
(3) நுண்ணறிவு விருத்தியின் போதாகும்.  (4) மனவெழுச்சி விருத்தியின் போதாகும்.

**22.** பின்வரும் பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்களில் குணப்படுத்த முடியாதது எது?
(1) சிபிலிசு  (2) எயிட்ஸ்  (3) கொனோறியா  (4) கிளமிடியா

**23.** பெண் இனப்பெருக்கத் தொகுதி தொடர்பான சரியான கூற்று எது?
(1) முதிர்ந்த கலங்கள் சூலகங்களில் சேமிக்கப்பட்டிருக்கும்.
(2) 28 நாட்களுக்கு ஒரு தடவை ஒரு சூலகத்திலிருந்து முதிர்ந்த ஒரு சூல் விடுவிக்கப்படும்.
(3) சூலகம் உருவானவுடனே ஈஸ்ரஜன், புரோஜெஸ்ரோன் ஓமோன்கள் சுரக்கப்படல் ஆரம்பமாகும்.
(4) கருக்கட்டலின் பின்னர் உருவாகும் நுகம் கருப்பையில் உட்பதிக்கப்படும்.

**24.** கர்ப்பிணித் தாயொருவருக்கு, முற்பிரசவ நிலையத்தில் வழங்கப்படும் போசணைப் பொருள்;
(1) விற்றமின் A  (2) விற்றமின் C  (3) விற்றமின் D  (4) விற்றமின் E

**25.** கர்ப்பிணிச் சந்தர்ப்பத்தில் முற்பிரசவ நிலையத்தில் ஒரு தடவை மட்டும் மேற்கொள்ளப்படும் சோதனை,
(1) குருதியின் வகை  (2) குருதியின் குளுக்கோஸ் மட்டம்
(3) குருதியமுக்கம்  (4) குருதியிலுள்ள ஈமோகுளோபின் மட்டம்

**26.** சிசுவென அழைக்கப்படுவது, பிறப்பின் பின்னரான,
(1) இரண்டு நாள் வயதுப் பிள்ளையாகும்.  (2) ஒரு மாத வயதுப் பிள்ளையாகும்.
(3) இரண்டு வார வயதுப் பிள்ளையாகும்.  (4) நான்கு வார வயதுப் பிள்ளையாகும்.


**27.** 'கொலஸ்ரம்' தொடர்பான சரியான கூற்றைத் தெரிக.
(1) பிள்ளையின் நிர்ப்பீடனத்துக்கு முக்கியமானதாகும்.
(2) தாய்ப்பாலில் அடங்கியுள்ள அத்தியாவசியமான கொழுப்பமிலமாகும்.
(3) முதல் சில நாட்களில் சுரக்கும் தாய்ப்பாலாகும்.
(4) மார்பகத்தில் அடங்கியுள்ள ஓமோனாகும்.

**28.** பாலூட்டும் நிலையில் தாய்ப்பால் சுரப்பதற்கு முக்கியமாக அமையும் ஓமோன் எது?
(1) அன்ட்ரஜன்  (2) ஈஸ்ரஜன்  (3) புரோலக்ரின்  (4) தைரொக்சின்

**29.** குழந்தைகளுக்கு வழங்கப்படும் பென்ரவலன்ற் (Pentavalent) தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்தப்படும் நோய்கள் இரண்டு,
(1) குக்கலும் ஏற்புவலியுமாகும்.  (2) சின்னமுத்தும் ஹெப்பரைற்றிஸ் B யுமாகும்.
(3) டிப்தீரியாவும் ரூபெல்லாவுமாகும்.  (4) கூகைக்கட்டும் காசமுமாகும்.

**30.** பல்வேறு தையல் முறைகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிக.
(1) விளிம்புகளை முடிப்புச்செய்வதற்கு வீசுப்புத் தையல் பொருத்தமானதாகும்.
(2) சிறுநூலோட்டம் தற்காலிகத் தையல் முறையாகும்.
(3) நிழல் வேலைப்பாட்டுக்கு பின்முள்ளுத் தையல் பயன்படுத்தப்படும்.
(4) தைப்புக்காரன் தையலின்போது செல்லும் நூல் புறவளத்தில் தெரியாது.

**31.** பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது,
(1) சங்கிலித் தையலாகும்.
(2) கம்பளித் தையலாகும்.
(3) நரம்புத் தையலாகும்.
(4) வெட்டுக்குத்துத் தையலாகும்.



32. பின்வரும் விடயங்களைக் கருதுக.

A – தையல் மாதிரிகளைத் தைக்கும்போது புடைவையின் சரியான (வளமான) பக்கத்தின் முடிப்புத் தொடர்பாக அதிகம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

B – வெட்டுதலுக்குத் தையலை மேற்கொள்ள முன்னர் புடைவையிலுள்ள சில நீள நூல்கள் அகற்றப்பட வேண்டும்.

C – பருத்திப் புடைவைகளின் பல்வகைமை அதன் நெசவு மற்றும் முடிப்பு ஆகியவற்றில் தங்கியிருக்கும்.

இவற்றில் சரியானது / சரியானவை

(1) A மாத்திரம்
(2) C மாத்திரம்
(3) A, B ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம்

33. பின்வருவனவற்றில் பருத்தி நூலின் / பருத்திப் புடைவைகளின் இயல்பாக அமைவது எது?
(1) வலிந்து இழுக்கும்போது உடைந்த விளிம்புகள் கரிய முடிவிடங்களுடன் காணப்படும்.
(2) தொட்டுப் பார்க்கும்போது இழுபடக்கூடியதாக இருக்கும்.
(3) அழுத்துவதற்கு அதிக வெப்பநிலை பயன்படுத்தப்படலாம்.
(4) நீரில் நனைக்கும்போது மெதுவாக ஈரமாகும்.

34. சிறுபிள்ளைகளுக்கான மேற்சட்டைக்கு (baby shirt) மிகப் பொருத்தமான புடைவை வகைகள் இரண்டு
(1) வொயிலும் லினனுமாகும்.
(2) நைலோனும் பொப்ளினுமாகும்.
(3) பொப்ளினும் மஸ்லினுமாகும்.
(4) மஸ்லினும் வொயிலுமாகும்.

35. வீட்டின் குளியலறையின் அந்தரங்கத் தன்மையைப் பேணுவதற்கு மிகவும் பொருத்தமாக அமைவது,
(1) காற்றிடைவெளி (fan light) இடல்
(2) யன்னல்கள் இடல்
(3) கிறில்கள் இடல்
(4) காற்றோட்டத் துளைகள் இடல்

36. வீட்டின் காற்றோட்டம் தொடர்பான மிக முக்கியமான விடயம் யாது?
(1) சுவர்களின் உயரத்தைக் குறைத்தல்
(2) மலைச்சரிவுகளிற்கு அண்மையில் அமைத்தல்
(3) குளிர் வர்ணங்களைப் பூசுதல்
(4) நடுமுற்றம், கூடாரம் ஆகியன அமைத்தல்

37. வீட்டு யன்னல்களுக்கென ஒளியைக் கசியவிடாத தன்மை கொண்ட கேட்டினை இடுவது பொருத்தமாக அமைவது,
(1) சமையலறைக்காகும்.
(2) வரவேற்பறைக்காகும்.
(3) படுக்கையறைக்காகும்.
(4) சாப்பாட்டறைக்காகும்.

38. இடைநிலை நிறம் எது?
(1) மஞ்சள் பச்சை (2) நீலச் செம்மஞ்சள் (3) சிவப்புச் செம்மஞ்சள் (4) செங்கபிலம்

39. வளங்கள் முகாமைத்துவச் செயன்முறையின் சரியான ஒழுங்கைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல், அவதானித்தல், திட்டமிடல்
(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல், மதிப்பிடல்
(3) அவதானித்தல், நடைமுறைப்படுத்தல், ஒழுங்கமைத்தல், மதிப்பிடல்
(4) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், அவதானித்தல், மதிப்பிடல்

40. மனை வரவுசெலவுத் திட்டத்தைத் திட்டமிடும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயம் அல்லாதது
(1) குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கை
(2) சேமிப்பு
(3) மேலதிக செலவுகள்
(4) அங்கத்தவரின் பால்நிலை

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2022 (2023)
## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **85**

විෂයය / பாடம்: **மனைப் பொருளியல்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 3 | 21. | 4 | 31. | 1 |
| 02. | 3 | 12. | 4 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 2 | 33. | 3 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 1 | 35. | 1 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 4 | 36. | 4 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 4 | 19. | 3 | 29. | 1 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 4 | 30. | 3 | 40. | 4 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| | | | |
|---|---|---|---|
| නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை | 25 / 40 | I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 25 / 40 |

# 85 - மனைப்பொருளியல்
## பகுதி II தேர்ச்சியும் தேர்ச்சி மட்டமும்

**வினாப்பத்திரம் II ஏழு வினாக்களை உள்ளடக்கியது.**

**முதலாம் வினா**

இவ்வினா கட்டாயமானது. இது பத்து வினாக்களை உள்ளடக்கியது. மனைப்பொருளியல் பாடத்திற்கு அமைவான பாட விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது. பல்வேறு தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாக அறிவு திறனை அளவிடக்கூடியதாகவும் கட்டாய வினா தயாரிக்கப்பட்டுள்ளது. இங்கு தேர்ச்சி மட்டத்திற்கு அமைவான குடும்ப அங்கத்தவரின் உணவுத் தெரிவு, பல்வேறு உணவுகளில் தாக்கம், உணவுப் பாதுகாப்பு, உணவுத் தயாரிப்பு பற்றிய அறிவு, திறன், செயன்முறைத் திறன்கள், உயர் உளத் திறன்களும் அளவீடு செய்யக்கூடியதாக வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**இரண்டாம் வினா**

புடைவையும் உடையமைத்தலும் தொடர்பான தேர்ச்சி மட்டங்களுக்கேற்ப அறிவு, திறன், பிரயோகம், செயன்முறைத் திறன்களை அளவீடு செய்வதற்காக இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளது.

**மூன்றாம், நான்காம் வினாக்கள்**

உணவும் போசணையும் தேர்ச்சி மட்டத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஐந்தாம் வினா**

மனை நிர்வாகத் தேர்ச்சிக்கு உள்ளடக்கப்பட்டது. மனைத் திட்டமிடலும், தயாரித்தல் தவிர வீட்டின் வளங்களைப் பயன்படுத்தல் சம்பந்தமான திறன்களைப் பெற்றுக்கொள்ளல்.

**ஆறாம், ஏழாம் வினாக்கள்**

பிள்ளை வளர்ச்சி தேர்ச்சிக்கு உட்பட்டது. குழந்தையின் தன்மை, மகப்பேறு, பெற்றோராதல், கர்ப்பிணியை பேணல், கட்டிளமைப்பருவத்தினரின் தன்மை. இனப்பெருக்கத் தொகுதி, பிள்ளைப் பேறு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான அறிவு, திறன், விளக்கம் போன்றவற்றை அளவிடுவதாக அமைக்கப்பெற்றுள்ளது.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**85 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

## மனைப் பொருளியல் II

※ **முதலாம்** வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு **10** புள்ளிகள் வீதமும் உரித்தாகும்.

**1.** பின்வரும் நிகழ்வைக் கற்று அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தருக.

தாய், தந்தை, இரண்டு சிறிய பெண் பிள்ளைகள் ஆகியோரைக் கொண்ட மத்தியதர வகுப்பு குடும்பமே இதுவாகும். நான்கு வயதுடைய மூத்த மகள் முன்பள்ளிக்குச் செல்கிறார். இளைய மகளின் வயது ஐந்து மாதங்களாகும். தந்தை, தனியார் நிறுவனமொன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமை புரிகிறார். தாய் வேலைப்பளுமிக்க இல்லத்தரசியாவார். இவர்களது இல்லம் நான்கு அறைகளைக் கொண்டுள்ளதுடன் அது சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

(i) முன்பள்ளிக்குச் செல்லும் பிள்ளையின் விசேட போசணைத் தேவைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii) மூத்த மகளின் நான்காவது பிறந்தநாள் விழாவுக்கென, முன்பள்ளிக்குக் கொண்டுசெல்வதற்குப் பொருத்தமான நற்காப்புச் செய்யப்பட்ட உணவொன்றைப் பெயரிட்டு, அந்த உணவில் அடங்கியிருக்கும் போசணைப் பதார்த்தத்தைக் குறிப்பிடுக.

(iii) தந்தை, தொழிலுக்குப் போகும்போது காலை உணவாகக் கொண்டுசெல்லத் தக்க, நீராவியில் அவித்துத் தயார்செய்யப்பட்ட பிரதான உணவு வகைகள் இரண்டை எழுதுக.

(iv) தாய் குருதிச்சோகையினால் அவதியுறுகிறார் என குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். தாயில் வெளிக்காட்டப்படும் நோயறிகுறிகள் இரண்டை எழுதுக.

(v) சிறுபிள்ளைக்கான மேற்சட்டையில் (baby shirt) விளிம்புத் தையலாக இடத்தக்க அலங்காரத்தைத் தரும் தையல் முறைகள் இரண்டைப் பெயரிடுக.

(vi) இளைய பெண் பிள்ளையின் பிறப்பு நிறை 2.8 kg ஆகும். அந்தப் பிள்ளை ஒரு வயதை அடையும்போது எதிர்பார்க்கப்படும் உடல் நிறை எவ்வளவாகும்?

(vii) ஐந்து மாத வயதுடைய சிறுபிள்ளைக்குப் பொருத்தமான விளையாட்டுப் பொருள்கள் இரண்டை எழுதுக.

(viii) வீட்டினுள் இந்தப் பிள்ளைகள் முகங்கொடுக்கக்கூடிய திடீர் விபத்துக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(ix) அவர்களது வீட்டில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு அலகுகள் இரண்டை எழுதுக.

(x) குறுக்குக் காற்றோட்டம் என்றால் என்ன? இந்த வீட்டில், குறுக்குக் காற்றோட்டம் நிலவும் சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுக.

## பகுதி - II

(i) முன்பள்ளிக்குச் செல்லும் பிள்ளையின் விசேட போசணைத் தேவைகள் இரண்டைக் குறிப்பிடுக.

- சக்தி
- இரும்பு
- கல்சியம்
- புரதம்
- விற்றமின் - A

**(விடயம் 02 புள்ளி 02)**

(ii) மூத்த மகளின் நான்காவது பிறந்தநாள் விழாவுக்கென, முன்பள்ளிக்குக் கொண்டுசெல்வதற்குப் பொருத்தமான நற்காப்புச் செய்யப்பட்ட உணவொன்றைப் பெயரிட்டு, அந்த உணவில் அடங்கியிருக்கும் போசணைப் பதார்த்தத்தைக் குறிப்பிடுக.

- தேங்காய் டொபி - காபோவைதரேற்று - கொழுப்பு
- கிழங்கு டொபி - காபோவைதரேற்று - புரதம்
- பால் டொபி - காபோவைதரேற்று - புரதம், கொழுப்பு
- மாஸ்மெலோ - காபோவைதரேற்று - புரதம்
- புஹில் தோசி - காபோவைதரேற்று -
- ஜுஜுப்ஸ் - காபோவைதரேற்று - கொழுப்பு, புரதம்
- தொதல் - காபோவைதரேற்று - கொழுப்பு
- மஸ்கட் - காபோவைதரேற்று - கொழுப்பு
- பூந்தி - காபோவைதரேற்று - கொழுப்பு

**(விடயம் 02 புள்ளி 02)**

(iii) தந்தை, தொழிலுக்குப் போகும்போது காலை உணவாகக் கொண்டுசெல்லத் தக்க, நீராவியில் அவித்துத் தயார்செய்யப்பட்ட பிரதான உணவு வகைகள் இரண்டை எழுதுக.

- இடியப்பம்
- பிட்டு வகை
- இட்டலி

**(விடயம் 02 புள்ளி 02)**

(iv) தாய் குருதிச்சோகையினால் அவதியுறுகிறார் என குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். தாயில் வெளிக்காட்டப்படும் நோயறிகுறிகள் இரண்டை எழுதுக.

- விரைவில் களைப்படைதல்.
- செயற்றிறன் குறைவதைல்.
- இதயத்துடிப்பு வேகமாக அதிகரித்தல்.
- உடல் வெளிறுதல்
- இளைப்பு

(விடயம் 02 புள்ளி 02)

(v) சிறுபிள்ளைக்கான மேற்சட்டையில் (baby shirt) விளிம்புத் தையலாக இடத்தக்க அலங்காரத்தைத் தரும் தையல் முறைகள் இரண்டைப் பெயரிடுக.

- சிப்பித் தையல்
- கம்பளித் தையல்
- உருட்டித் தையல்

(விடயம் 02 புள்ளி 02)

(vi) இளைய பெண் பிள்ளையின் பிறப்பு நிறை 2.8 kg ஆகும். அந்தப் பிள்ளை ஒரு வயதை அடையும்போது எதிர்பார்க்கப்படும் உடல் நிறை எவ்வளவாகும்?

8.4 kg

(2.8 x 3 = 8.4 kg)

(புள்ளி 02)

(vii) ஐந்து மாத வயதுடைய சிறுபிள்ளைக்குப் பொருத்தமான விளையாட்டுப் பொருள்கள் இரண்டை எழுதுக.

இனிமையான ஒலி எழுப்பக் கூடிய, அசையக் கூடிய, பாரமற்ற, மென்மையான, வர்ணங்களையுடைய விளையாட்டுப் பொருட்கள்

(02 விடயம் 02 புள்ளிகள்)

(viii) வீட்டினுள் இந்தப் பிள்ளைகள் முகங்கொடுக்கக்கூடிய திடீர் விபத்துக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

- விழுதல்
- எரிகாயங்கள் ஏற்படல்
- மூக்கு, தொண்டையினுள் ஏதாவது பொருட்கள் அடைபடுதல்
- மின்தாக்கு (மின்சாரத்தினால் ஏற்படும் விபத்துக்கள்)

- நீரினால் ஏற்படும் விபத்துக்கள்
- ஆயுதங்களினால் ஏற்படும் விபத்துக்கள்
- நச்சுப் பொருட்கள் அருந்துவதினால் ஏற்படும் விபத்துக்கள்

**(விடயம் 02 புள்ளி 02)**

(ix) அவர்களது வீட்டில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு அலகுகள் இரண்டை எழுதுக.

- வரவேற்பறையின் ஒரு பகுதி சாப்பாட்டறை
- வரவேற்பறையின் ஒரு பகுதி செயற்பாட்டறை
- சமையலறையின் ஒரு பகுதி களஞ்சிய அறை
- சமையலறையின் ஒரு பகுதி சாப்பாட்டறை

**(விடயம் 02 புள்ளி 02)**

(x) குறுக்குக் காற்றோட்டம் என்றால் என்ன? இந்த வீட்டில், குறுக்குக் காற்றோட்டம் நிலவும் சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுக.

ஒரு அறைக்குள் வளியானது உட்சென்று அதற்கு சமாந்தரமாக மறுபக்கத்தால் வளி வெளியேறுவதாகும்.

உதாரணம் :- ஒரு அறையின் கதவு அல்லது யன்னலுக்கு சமாந்தரமாக மறு பக்கத்தில் கதவு அல்லது யன்னல் காணப்படல்.

**(விளக்கம் 01 புள்ளி 01 உதாரணம் 01 புள்ளி 01)**

2. (i) ஆடையொன்றின் விளிம்பைத் தைத்து முடிப்புச் செய்யும்போது கைக்கொள்ளப்படும் படிமுறைகள் மூன்றைக் குறிப்பிடுக.

- விளிம்பை மடித்தல்.
- பெரு நூலோடல்.
- விளிம்புத் தையல் தைத்தல். (சோம் தையல்/ பொறித் தையல்/ விஸ்பத் தையல்)

(விடயம் 03 புள்ளி 03)

(ii) நார் வகைப்படுத்தலுக்கு அமைய மனிதனால் ஆக்கப்பட்ட நார் வகைகள் இரண்டைப் பெயரிட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

| பாதித் தொகுப்பு நார் | தொகுப்பு நார் | வேறுநார் |
|---|---|---|
| - ரெயோன் | - பொலிமைட் - நைலோன் | - தங்கம் |
| - விசுக் கோசு ரெயோன் | - பொலியஸ்டர் - டெரலீன் | - வெள்ளி |
| - கியுப்ரா அமோனியம் ரெயோன் | - அக்றிலின் - ஓலோன் | - கண்ணாடி |
| - செலுலோசு அசிடேட் ரெயோன் | | |
| - நைத்ரோ செலுலோசு ரெயோன் | | |

**(நார் வகைகள் இரண்டு பெயரிடல் 01 ½)**
**(இரண்டு உதாரணங்களுக்கு 01 ½)**
**மொத்தம் 03 புள்ளிகள்**

(iii) சிறுகுறிப்பு எழுதுக.

(a) சிறுவருக்கான ஆடையில் காணப்பட வேண்டிய விசேட இயல்புகள்

(b) தையல் மாதிரிகளைத் தயாரித்தல்.

(a)

- அணியவும் களையவும் இலகுவாயிருத்தல்.
- பொருத்தமான திறப்புக்கள் பயன்படுத்தல்.
- தளர்ச்சியாக தைத்திருத்தல்.
- ஆடையின் பொருத்துக்களும் நேர்த்தியும் பிள்ளைக்கு சொகுசானதாக அமைதல்.
- அலங்காரமானதாக அமைத்தல்.

(விடயம் 02 புள்ளி 02)

(b)

- இள நிற பருத்தித் துணியை தெரிவு செய்து கொள்ளல்.
- பொருத்தமான நிற நூல்களை தெரிவு செய்து கொள்ளல்.
- பொருத்தமான அளவில் துணியை பெற்றுக் கொள்ளல்.
- சரியான பக்கம் பிழையான பக்கங்களில் தையல்கள் சரியாக அமைதல்.
- தையலின் ஆரம்பம் முடிவு சரியாக அமைதல்.
- தையல்கள் சீராக அமைதல்.
- தையல்களை தெளிவாக அறிந்து கொள்ள கூடியதாக அமைதல்.

(விடயம் 02 புள்ளி 02)

(மொத்தப் புள்ளி 10)

3. (i) 'உணவு' என்பதை வரையறுக்க.

உடலுக்குச் சக்தி வழங்கல், வளர்ச்சிக்கும் உடல் நிலைப்பாட்டிற்கும் உதவுல், உடலை நோயிலிருந்து பாதுகாத்தல் போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் உடலுக்கு நச்சுத் தன்மையை ஏற்படுத்தா, திண்மமாகவோ அல்லது திரவமாகவோ உட்னெடுக்கக் கூடிய பொருட்கள் உணவு எனப்படும்.

**(03 புள்ளி)**

(ii) உணவுகளைத் தயார்செய்யும்போது அவற்றின் பண்புத் தரங்களைப் பாதுகாப்பதற்குக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் மூன்றை எழுதுக.

- வெட்டும் முன் கழுவிக் கொள்ளல்

  (உப்பு, குளோரின் கலந்த நீர்)
- மிகச் சிறிய துண்டுகளாக வெட்டாதிருத்தல்.
- பச்சையாக உண்ணக் கூடிய உணவுகளை பரிமாறுவதற்கு சற்று முன் தயாரித்துக் கொள்ளுதல்.
- சுத்தமான உபகரணங்களும் கருவிகளும் பயன்படுத்தல்.
- உணவுடன் தாக்கமடையாத உபகரணங்களையும் பொருத்தமான கருவிகளையும் பயன்படுத்தல்.
- சுவைக்காக இயற்கையான சுவைச் சரக்குகளைப் பயன்படுத்துதல்.

**(விடயம் 03 புள்ளி 03)**

(iii) விருந்தினர் ஒருவருக்குப் பொருத்தமான விசேட மதிய போசன உணவுப் பட்டியலைத் திட்டமிடுக.

- விசேட சோறு வகை
- அதற்குப் பொருத்தமான கறி வகைகள்
- பல்வகைமை - நிறம், இழையமைப்பு, சமையல் முறை
- அதிக நீர்த்தன்மையான கறிகளைப் பயன்படுத்தாதிருத்தல்.
- சலாது வகை, மோஜு, அச்சாறு போன்றவை பொருத்தமாக தெரிவு செய்தல்.
- ஈற்றுணா கட்டாயம் அடங்கியிருத்தல்.

**பொருத்தமான உணவுப் பட்டியல்**

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

4\. (i) சிறுபராயத்தில் ஏற்படும் கல்சியக் குறைபாட்டின் நோயறிகுறிகள் மூன்றைக் குறிப்பிடுக.

- பல் முளைத்தல் தாமதமாதல்
- நடத்தல் தாமதமாதல்
- கால்கள் வளைதல்
- முட்டும் முழங்கால்கள் ஏற்படுதல்
- மணிக்கட்டு, கணுக்கால் போன்ற மூட்டுக்கள் வீங்குதல்.
- விலா என்புகள் சீராக வளர்ச்சியடையாது மினுங்கும் முத்துக்கள் போன்று காணப்படல்.

**(விடயம் 03 புள்ளி 03)**

(ii) நாளாந்த உணவில் நார்ப்பதார்த்தங்கள் அடங்கியிருப்பது அவசியமாகும். இதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

- மலச்சிக்கல்களை தடுத்தல் / குடலின் சுற்றுச் சுருங்கல் அசைவைவேகப்படுத்தல்.
- பசி ஏற்படல் தாமதமாதல்
- குடற் புற்றுநோய் ஏற்படுவது தவிர்க்கப்படல்.
- தொற்றா நோய்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளல்.

  (நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், புற்றுநோய், இதய நோய்கள், கொலஸ்திரோல் கட்டுப்பாடு)
- கொழுத்த உடல் ஏற்படுவது தவிர்க்கப்படல்.

**(விடயம் 03 புள்ளி 03)**

(iii) சிறுவர்களின் குறைபோசணை நிலைமை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள் நான்கை விளக்குக.

- குறைந்த பொருளாதார நிலை
- கல்வி அறிவின்மை
- கவனயீனம்
- போசணை தொடர்பான எவ்வித அறிவும் மனப்பாங்கும் காணப்படாமை
- சிறந்த சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றாமை
- பிள்ளைகளிடையே காணப்படும் குறைந்த வயது இடைவெளி
- உரிய முறையில் சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாமை
- குறைந்த வயதில் கர்ப்பமடைதல்
- குழந்தைகளுக்கு மேலதிக உணவு கொடுத்தல் தாமதமாதல்
- பூச்சித் தொற்றுக்கள்

- அடிக்கடி நோய்த் தொற்றுக்குள்ளாதல்.
- சிறுவயதிலிருந்து சிறந்த போசணை பெற்றுக் கொடுக்காமை.

**(விடயம் 04 புள்ளி 04)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

5. (i) சிறப்பான மனை வளங்களின் முகாமையினூடாக குடும்ப அங்கத்தவர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

- குடும்பத்தின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் பெருமளவில் நிறைவேற்றப்படல்.
- குடும்ப அங்கத்தவர்கள் திருப்தியுடன் வாழ்தல்.
- குடும்ப அங்கத்தவர்களிடையே அந்நியோன்னியத் தொடர்பு விருத்தியடைதல்.
- குடும்பத்தில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படல்.
- குடும்ப அங்கத்தவர்கள் உளநலனைப் பெற்று வாழ்தல்.
- மனையில் சிறந்த திட்டமிடலும் முகாமைத்துவமும் ஏற்படல்.

**(விடயம் 03 புள்ளிகள் 03)**


(ii) "மனை முகாமையின்போது முக்கியமாக அமையும் வளங்கள் இரண்டு காலமும், மின்சாரமும் ஆகும்." மனைச் செயற்பாடுகளில் மின் சக்தி பயன்படுத்தப்படும் பல்வேறு விதங்கள் மூன்றை உதாரணங்களுடன் தருக.

- ஒளிச் சக்தி - மின்குமிழ்
- வெப்ப சக்தி - மின் கேத்தல், அமிழ்ப்பு வெப்பமாக்கி, மின் அழுத்தி, மின்கனலடுப்பு, டோஸ்டர்
- இயக்க சக்தி - மின் விசிறி, பிளேண்டர், முட்டை அடி கருவி, மின் அரைப்பான், தேங்காய் துருவி
- ஒளிச் சக்தி - மின் மணி

(03 விடயங்களுக்கு புள்ளி 01 ½)
(03 உதாரணங்களுக்கு புள்ளி 01 ½)
(03 புள்ளிகள்)


(iii) வீட்டு அலங்காரத்தில் நியம மற்றும் நியமில் சமனிலை ஆகியன வெளிக்காட்டப்படும் சந்தர்ப்பங்களை ஒவ்வொன்றை வரிப்படங்களின் மூலம் சமர்ப்பிக்க.

நியம முறை சமநிலை



(02 புள்ளிகள்)

நியமமில் சமநிலை



(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

6. (i) கர்ப்பிணிப் பருவத்தின் இடர்க் காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக.

- நீரிழிவு
- உயர்குருதி அமுக்கம்
- இளைப்பு
- சமூக நோய்கள்
- தாயின் அதிகரித்த அல்லது குறைந்த வயது (14 வயதிலும் குறைதலும 35 வயதிலும் அதிகரித்தலும்)
- உயரம் குறைதல்
- பரம்பரை நோய்கள்( தலசீமியா, ஈமோபிலியா போன்றன)
- நிறை அதிகம் அல்லது குறைவு

(விடயம் 03 புள்ளி 03)

(ii) குழந்தைக்கான மேலதிக உணவைத் தயாரிக்கும்போது, கைக்கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்றை எழுதுக.

- அளவும் போசணையும் படிப்படியாக அதிகரித்தல்
- உப்பையும் சீனியையும் சேர்ப்பதைத் தவிர்த்தல்
- பல்வேறு வகையான உணவு வளைகளைச் சேர்த்தல்
- அரைத் திண்ம உணவில் ஆரம்பித்து படிப்படியாகத் திண்ம உணவிற்குச் செல்லல்
- சமிபாட்டுக்கு இலகுவானதாக இருத்தல்
- சுத்தமான கருவிகள் உபகரணங்கள் பயன்படுத்தல்
- பல்வகையான சமையல் முறைகளை பயன்படுத்தல்.

(விடயம் 03 புள்ளி 03)

(iii) குழந்தைப் பருவத்தில் நிகழும் சமூக விருத்தியை நான்கு விடயங்களின் உதவியுடன் விளக்குக.

- தாயை அறிந்து கொள்வர்.
- தந்தையுடன் ஏனைய குடும்ப அங்கத்தவர்களை அறிந்து கொள்வர்
- அடிக்கடி சந்திக்கும் பிள்ளைகளை அறிந்து கொள்ள முயற்சி எடுப்பர்
- மற்றவர்களுடன் சிரிப்பதற்கு முயற்சி எடுப்பர்.
- சிறுவர்களுடன் விளையாடுவதற்கு விருப்பம் காட்டுவர்.
- கண்ணாடி முன் நின்று விம்பத்துடன் கதைப்பர்.
- புதியர்களைக் கண்டால் முதலில் பயப்படுவர். பின்னர் மெதுவாக பழகிக் கொள்வர்

**(விடயம் 04 புள்ளி 04)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

7. (i) 'மாதவிடாய் நிறுத்தம்' என்பதை அறிமுகஞ் செய்க.

45-55 வயதளவில் ஒரு பெண்ணின் மாதவிடாய் சக்கர நிறுத்தம் நிகழுகிறது. இது மாதாவிடாய் நிறுத்தம் எனப்படும் பாலியல் ஒமோன்களின் உற்பத்தி குறைவடைவதனால் இந்நிலைமை ஏற்படுகிறது

**(புள்ளி 04)**

(ii) சிசுவில் ஏற்படும் உணர்வுகள் மூன்றைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றின் போதும் வெளிக்காட்டப்படும் தெறிவினை விதம் எழுதுக.

- சப்தம் - அதிக சப்தத்திற்கு திடுக்கிடல்
- தொடல் - முலைகள் வாயில் பட்டதும், பாலை உறிஞ்சிக் குடித்தல்
  சிசுவின் உள்ளங்கையில் விரலை வைத்தவுடன் கையை மூடிக் கொள்ளல்
- பார்வை - வெளிச்சம் பட்டதும் கண்களை மூடிக் கொள்ளல்

(உணர்வுகள் 03 பெயரிடப்பட்டிருத்தல் புள்ளி 01 ½)

(தெறிவினை 03 குறிப்பிடப்பட்டிருத்தல் புள்ளி 01 ½)

(iii) 'சமவயதினருடனான தொடர்புகள் கட்டிளமைப் பருவத்துப் பிள்ளையின் விருத்தியில் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் செல்வாக்குச் செலுத்தும்' இதனை நான்கு விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடுக.

நேர்மறையானவை

- சமயவயதுக் குழுக்களுடன் பழகுவதகால் சமூக விருத்தி ஏற்படல்
- பின்பற்றுதல், வீரவணக்கம் காரயமாக சிறந்த பண்புகள் விருத்தியடைதல்
- சுய கௌரவத்தை மேம்படுத்திக் கொள்ள முடிதல்
- சிறந்த சமூகத் தொடர்பு காரணமாக சிரமதானம் போன்ற வேலைகளில் ஈடுபடுதல்
- தன்னாற்றல் விருத்தியடைதல்
- பிறருக்கு உதவி செய்ய முன் வருதல்
- பொறுப்புக்களை ஏற்று நடத்துவதற்கு முன் வருதல்
- சுய நலத்திலிருந்து விடுபட்டு பொது நலனில் கவனம் செலுத்தல்
- தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வர்.
- சமூக சிந்தனைகளுக்கு மதிப்பளித்தல் **(விடயம் 02 புள்ளி 02)**



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

மறை வகையானவை

- பல்வேறு வற்புறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதனால் பல சிக்கல்களுக்கு ஆளாதல்.
- பின்பற்றுவதனால் தவறான பழக்க வழக்கங்களை காண்பிப்பர்.
- தனது குடும்ப அலகிலிருந்து விடுபட முயற்சி செய்வர்
- பெற்றோர் பெரியோர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வர்
- சமூக விரோதச் செயற்பாடுகளை வெளிக்காட்டுவர்
- சமூகத்திற்கு பொருத்தமற்ற செயற்பாடுகளை செய்ய முயற்சிப்பதனால் தவறான சமூகத்தினுள் தள்ளப்படுவர்

(விடயம் 02 புள்ளி 02)

(மொத்தம் 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!